



# சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 294 | 17.04.2026 | FRIDAY | CHITHIRAI: 4 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 294 | 17.04.2026 | வெள்ளிக்கிழமை | சித்திரை : 4 | விலை : ரூ.5/-


## மகளிர் இடஒதுக்கீடு...

# "அரசியல் சாயம் பூச வேண்டிய அவசியமில்லை"!

## "தொகுதி மறுவரையறையால் தமிழகத்துக்கு பாதிப்பு இருக்காது; மத்திய அரசு உறுதியளித்துள்ளது" இபிஎஸ்

சென்னை: ஏப்.17-

"தொகுதி மறுவரையறையால் தமிழகம் உட்பட எந்த மாநிலமும் பாதிக்கப்படாது என மத்திய அரசு உறுதியளித்துள்ளது" என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.



கோயம்புத்தூர் தெற்கு சட்டப்பேரவைத் தொகுதியில் எடப்பாடி கே. பழனிசாமி சித்தாபுதூர் வி.கே.கே மேனன் சாலை அருகில் சாலை வலம் வந்து பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது அவர் பேசும்போது, "தொகுதி மறுவரையறையால் பாதிப்பு இருக்காது என மத்திய அரசு உறுதியளித்துள்ளது. தமிழகம் உட்பட எந்த மாநிலமும் பாதிக்கப்படாது என உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார். மக்கள் மகிழ்ச்சியடையும் வகையில் தொகுதி மறுவரையறை இருக்கும்.

மகளிருக்கு 33 % இட ஒதுக்கீடு கிடைக்காமல் தடுக்கவே ஸ்டாலின் தொகுதி மறுவரையறையை எதிர்க்கிறார். பெண்கள் மத்தியில் மத்திய அரசுக்கு நல்ல பெயர் கிடைத்துவிடும் என நினைக்கிறார். பல வருடங்கள் மத்தியில் அமைச்சராக இருந்தவர் ப. சிதம்பரம். நிதி அமைச்சராக இருந்த ப.சிதம்பரம் தமிழ்நாட்டுக்கு என்ன கொண்டு வந்துள்ளார்?, எங்களைப் பற்றி பேச ப.சிதம்பரத்துக்கு என்ன தகுதி இருக்கிறது? மத்திய அரசு கூறிய கருத்தை தான் நான் தெரிவித்தேன். தொகுதி மறுவரையறை விவகாரத்தில் ஸ்டாலின் டபுள் கேம் ஆடுகிறார்.

கோவை மக்கள் உஷாரான மக்கள். இங்கு எங்கேயுமே கருப்புக்கொடி இல்லை. ஸ்டாலினுக்கு தோல்வி ஜுரம் வந்துவிட்டது. அதிமுக ஆட்சிக்கு வந்த பிறகு பொய் வழக்குப் போட்ட அதிகாரிகள் யாராக இருந்தாலும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். " என்று பழனிசாமி தெரிவித்தார்.

## திமுகவின் கருப்பு தேர்தல் அறிக்கையையே முதலில் தீயிட்டு கொளுத்த வேண்டும்: தமிழக பாஜக பதிலடி

சென்னை: ஏப்.17-

பாஜக சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீட்டை அளிக்கும், சமூக நீதிக்கான தொகுதி வரையறை மசோதாவை கருப்புச் சட்டம் என்று அவதூறு பேசி, எதிர்ப்பு தெரிவித்து தீயிட்டுக் கொளுத்தும் முதல்வர் ஸ்டாலின், திமுகவின் நிறைவேற்றாத பொய் வாக்குறுதிகள் அளித்து தமிழக மக்களுக்கு ஏமாற்றத்தை அளித்து துரோகம் செய்த மக்கள் விரோத திமுகவின் கருப்பு தேர்தல் அறிக்கையை முதலில் தீயிட்டு கொளுத்த வேண்டும்.

தமிழக முதல்வர் ஸ்டாலின் 2026 மே 4ம் தேதி அன்று தீய சக்தி திமுக ஆட்சியை தமிழகத்திலிருந்து மக்கள் அகற்றப் போகின்றதை முன்னிட்டு, திராவிட மாடல் திமுக ஆட்சியின் நமக்கு நாமே திட்டத்தின் ஒரு பகுதியாக தாங்களே தங்கள் வீடுகளில் கருப்பு கொடி ஏற்றி, தங்களுக்கு தாங்களே பிரியா விடை கொடுக்க கோலங்கள் போட்டு பிரிவுபச்சார விழாவை கனத்த இதயத்துடன் தமிழகம் முழுக்க நடத்தி வருவதைப் போல் இந்த கருப்புக்கொடி காமெடி கண்ணீர் தீ போராட்டம் அமைந்துள்ளது.

திமுக அரசின் முதல்வர் ஸ்டாலின், மத்திய அரசுக்கு எதிராக கோலங்கள் போட சொல்லி, நாடகங்கள் நடத்துகிறார்.

திமுகவிற்கு எதிரான மக்களின் கடும் கோபத்தை, அதிருப்தியை, தேர்தல் நாளன்று அமைதிப் புரட்சி செய்ய காத்திருப்பதை, திசை திருப்ப, 'பழைய மொந்தையில் புதிய கள்' என்பது போல தீ கருப்புக் கொடி கோலங்கள் என பிசுபிசுத்துப் போன தேர்தல் நாடகத்தை அரங்கேற்றி, ஆட்சிப் பறிபோகிறதே என்ற ஆத்திரத்தில், பதட்டத்துடன், அச்சத்துடன் அமைதியின்றி தவிக்கிறார்.

பாஜக மீண்டும் பெண்களுக்கு 33 சதவீதம் இட ஒதுக்கீடு கிடைப்பதை தடுத்தே தீர வேண்டும் என்கிற தீய நோக்குடன், ஆட்சிக்கு வந்தால் அரசியல் சட்டத்தை பாஜகவினர் மாற்றி விடுவார்கள் என திமுக, காங்கிரஸ் கட்சியினர் நாடாளுமன்றத் தேர்தலில் பொய்ப் பிரச்சாரம் செய்தது போல, இப்போது சமூக நீதிக்கான தொகுதி மறுவரையறை மசோதாவை வைத்து அவதூறு அரசியல் செய்து மக்களை ஏமாற்றி விடலாம் என்று கருப்பு கொடி போராட்டத்தை முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

கோலங்கள் போட்டு எதிர்ப்புகளை காட்டுங்கள் என்று தமிழக பெண் சமுதாயத்தை தூண்டிவிட்டு, தமிழ் தமிழர், தமிழகத்தை வாழவைத்த, வளர்ச்சி பாதைக்கு கொண்டு சென்ற மத்திய பாஜக அரசு, பிரதமர் மோடிக்கு எதிராக கலகக் குரல் எழுப்பும் சதி திட்டத்திற்கு தமிழக பெண்கள் துணை போக மாட்டார்கள்.

'சேலம் என்றாலும் ஸ்டீல்; ஸ்டாலின் என்றாலும் ஸ்டீல்' என்று துருப்பிடித்த இரும்பாக திராவிட மாடல் ஆட்சியும் தானும் மாறி போனாலும், அழகான ஒப்பனையில், துக்ளக் பாணியில், நீட் ரகசியம் போல நம்ப முடியாத, செய்ய முடியாத தேர்தல் வாக்குறுதிகளை ப்ளாப் ஸ்டார் (Flop Star) திமுக தேர்தல் அறிக்கையை சூப்பர் ஸ்டார் தேர்தல் அறிக்கை என்று கூச்சம் இல்லாமல் பொய் சொல்கிறார்.

ஒவ்வொரு தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திலும் திராவிட மாடல் அப்பா பேசுகிறேன் என்று தேன் தடவுவது போல பேசி, அடுக்கடுக்காக பொய்கள் கூறி, தேர்தல் நேரத்தில் வாக்குறுதிகளை அள்ளித் தந்து, மக்களை ஏமாற்றி விடலாம் என்ற இறுமாப்புடன் பிரச்சாரம் செய்யும் முதல்வர் ஸ்டாலினின் பேச்சுக்கள், ஆசை வார்த்தைகள், உயிரைப் போக்கும் புதைகுழிகள் என்பதை மக்கள் புரிந்து கொண்டு விட்டார்கள்.

எனவே பெண்களுக்கான 33 சதவீதம் இட ஒதுக்கீட்டை இதற்கு முறையை நோக்கத்திற்காக, தொகுதி வரையறை மசோதாவுக்கு எதிராக திமுக நடத்தும் முகமது பின் துக்ளக் நாடகங்களை மக்கள் புறக்கணிப்பார்கள். வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் தீய சக்தியை திமுகவை வீழ்த்தி வாக்களித்து தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியை அமைப்பார்கள்.

இந்தியாவிற்கும் இந்திய மக்களுக்காகவும் நரேந்திர மோடி அரசு எடுக்கும் நல்ல செயல்பாடுகளை, மக்கள் விரோத காங்கிரஸ், திமுக, இண்டியா கூட்டணி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் சூழ்ச்சிகளை கடந்து மக்கள் ஆதரவுடன் பாஜக நிறைவேற்றும்," இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

புதுடெல்லி: ஏப்.17-

நாட்டின் மக்கள் தொகையில் 50% உள்ள பெண்கள், முடிவெடுக்கும் இடங்களில் பங்கேற்பது காலத்தின் கட்டாயம் என தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, நாட்டின் பெண்களுக்கான உரிமையை எதிர்த்தவர்களை அவர்கள் ஒருபோதும் மன்னித்ததில்லை என குறிப்பிட்டுள்ளார்.

சட்டமன்றங்களிலும் நாடாளுமன்றத்திலும் மகளிருக்கு 33% இட ஒதுக்கீடு அளிக்கும் நோக்கில், அரசியல் சாசன திருத்தம் (131வது திருத்தம்) மசோதா 2026, தொகுதி மறுவரையறை மசோதா 2026, யூனியன் பிரதேச சட்டங்கள் (திருத்த) மசோதா 2026 ஆகிய மூன்று மசோதாக்கள் மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டன.

இதன் மீதான விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "ஒரு நாட்டின் வாழ்வில் சில முக்கியமான தருணங்கள் அமையும். அத்தகைய தருணங்களில், சமூகத்தின் மனநிலையும், தலைமைத்துவத்தின் திறமையும் இணைந்து ஒரு வலுவான மரபை உருவாக்குகின்றன. இந்தியாவின் நாடாளுமன்ற ஜனநாயக வரலாற்றில் இந்த தருணம் அத்தகைய ஒரு முக்கியமான தருணமே.

பெண்களுக்கான இடஒதுக்கீடு குறித்த யோசனை 25 - 30 ஆண்டுகளுக்கு முன்பு முதன்முதலில் கருவாகி, அதற்கான தேவை உணரப்பட்டபோதே நாம் இதைச் செயல்படுத்தியிருக்க வேண்டும். அப்படி செய்திருந்தால், இன்று நாம் ஒரு முதிர்ந்த நிலைக்கு



அதை கொண்டு வந்திருப்போம். உள்ளாட்சித் அமைப்புகளுக்கான தேர்தலில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்க முன்வந்தவர்கள், நாடாளுமன்றத்தில் அளிக்க முன்வரவில்லை. அதற்குக் காரணம், தங்களுக்கு போட்டி அதிகமாகிவிடக் கூடாது என்பதே. நமது நாடு 'ஜனநாயகத்தின் தாய்' ஆகும். நமது ஜனநாயகம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் பயணித்து வருகிறது. அந்த வளர்ச்சிப் பயணத்திற்கு ஒரு புதிய பரிமாணத்தைச் சேர்க்கும் நற்பேறு இந்த அவையில் உள்ள நம் அனைவருக்கும் கிடைத்துள்ளது.

நாட்டின் மக்கள் தொகையில் பெண்கள் பாதியளவு இருக்கிறார்கள். தேசத்தைக் கட்டமைக்கும் (நாடாளுமன்ற) செயல்முறையில் அவர்கள் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்தமைக்காக நாம் அனைவரும் கொடுத்து வைத்தவர்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம், இந்த முக்கியமான வாய்ப்பை நழுவ விட்டுவிடக் கூடாது. இந்தியர்களாகிய நாம் அனைவரும் ஒன்றிணைந்து, நாட்டிற்கு ஒரு புதிய திசையை வழங்கப் போகிறோம். நமது ஆட்சி நிர்வாக அமைப்பில் உணர்வுபூர்வமான அணுகுமுறையை ஊடுருவச் செய்ய, நாம் ஒரு அர்த்தமுள்ள முயற்சியை மேற்கொள்ளப் போகிறோம். இது நாட்டின் அரசியலை வடிவமைப்பது மட்டுமல்லாமல், நாட்டின் எதிர்காலத் திசையையும் நிலையையும் தீர்மானிப்பதாகவும் அமையும்.

21ஆம் நூற்றாண்டில், இந்தியா ஒரு புதிய தன்னம்பிக்கையுடன் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இன்றைய உலகில் இந்தியாவுக்கு கிடைத்துள்ள அங்கீகாரத்தை நாம் அனைவரும் உணர்கிறோம். இது நம் அனைவருக்கும் பெருமைக்குரிய ஒரு தருணமாகும். 'வளர்ச்சியடைந்த இந்தியா' என்பது வெறும் ரயில்வே வசதிகளை மட்டும் குறிப்பதல்ல என்று நான் உறுதியாக நம்புகிறேன். சாலைகள், உள்கட்டமைப்பு அல்லது பொருளாதார மற்றும் வளர்ச்சிப் புள்ளிவிவரங்கள் மட்டுமே ஒரு வளர்ச்சியடைந்த இந்தியா என்று கருதும் குறுகிய கண்ணோட்டம் கொண்டவர்கள் நாங்கள் அல்ல. 'அனைவருடனும் இணைந்து அனைவருக்குமான வளர்ச்சி' என்ற மந்திரத்தை உண்மையாகவே பிரதிபலிக்கும் ஒரு 'வளர்ச்சியடைந்த இந்தியாவையே' நாங்கள் விரும்புகிறோம். நாட்டின் மக்கள் தொகையில் 50 சதவீதம் உள்ள பெண்கள், கொள்கை உருவாக்கத்தில் ஒரு அங்கமாக மாற வேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாகும்.

நாம் ஏற்கெனவே இதில் காலதாமதம் செய்துவிட்டோம். அதற்கான காரணங்கள் எதுவாக இருந்தாலும், அதற்குப் பொறுப்பானவர்கள் யாராக இருந்தாலும், இந்த எதார்த்தத்தை நாம் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். பெண்களுக்கான இடஒதுக்கீடு தொடர்பான இந்தச் செயல்முறை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அனைத்துக் கட்சிகளுடனும் கலந்தாலோசனைகள் நடத்தப்பட்டன. ஒரே ஒரு கட்சியைத் தவிர, நாங்கள் சந்தித்த மற்ற அனைவரும் கொள்கை ரீதியாக இதற்கு எந்த எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை.

அரசியல் ரீதியில் மட்டுமே சிந்திப்பவர்களுக்கு நான் ஒரு அறிவுரையை வழங்க விரும்புகிறேன். நம் நாட்டில் பெண்களுக்கான இடஒதுக்கீடு குறித்த விவாதம் தொடங்கியதிலிருந்து, அதைத் தொடர்ந்து நடைபெற்ற ஒவ்வொரு தேர்தலிலும், பெண்களுக்கான இந்த உரிமையை எதிர்த்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்களை நாட்டின் பெண்கள் ஒருபோதும் மன்னித்ததில்லை.

பெண்களுக்கான இட ஒதுக்கீடு நாட்டின் ஜனநாயகத்துக்குச் சாதகமாக அமையும். நாட்டின் கூட்டு முடிவெடுக்கும் செயல்முறைக்கு வலுசேர்க்கும். மேலும், இதற்கான பெருமை நம் அனைவருக்கும் உரித்தானதாக இருக்கும். இதற்கான முழு உரிமையும் ஆளுங்கட்சிக்கோ அல்லது மோடிக்கோ மட்டும் உரியதல்ல. அதேபோல, இங்கு அமர்ந்திருக்கும் மற்றவர்களுக்கு மட்டும் உரியதல்ல. இதற்கு ஒரு அரசியல் சாயம் பூச வேண்டிய அவசியம் ஏதுமில்லை என்றே நான் கருதுகிறேன்" என்று பிரதமர் மோடி பேசினார்.

முன்னதாக, 'மகளிர் இடஒதுக்கீடு என்ற போர்வையில் வரும் தொகுதி மறுவரையறை மசோதாவை எதிர்ப்பதில் எதிர்க்கட்சிகள் ஒற்றுமையுடன் நிற்கும்' என காங்கிரஸ் கட்சி கூறியுள்ளது கவனிக்கத்தக்கது.

## பிஜேபி மாவட்டத் தலைவரை மாத்துங்க!

### திருச்சி புறநகரில் போர்க்குரல்

திருச்சி, ஏப்.17-

திருச்சி புறநகர் மாவட்டத்தில் பாரதிய ஜனதா கட்சியில், ஆங்காங்கே கட்சியினர் குமுறிக் கொண்டுள்ளனர். குமுறல் சத்தம் கேட்டு ஸ்பாட்டில் ஆஜரானோம் நாம்...

திருச்சி புறநகர் மாவட்டத் தலைவராக இருப்பவர் பிரகம்பி கிராமத்தைச் சேர்ந்த அஞ்சாநெஞ்சன். இவர் கடந்த முறையும் திருச்சி புறநகர் மாவட்ட தலைவராக இருந்துள்ளார். கடந்த முறையும் சரி தற்போதும் சரி பிஜேபி கட்சியின் வளர்ச்சிப் பணிகளை பார்க்காமல் "பசை" க்காக திமுக விற்கும், அமைச்சர் நேருவிற்க்கும் ரொம்பவே விசுவாசமாக இருந்து வருகிறாராம். கூடுதலாக இவர் அமைச்சர் நேருவின் உறவினர் என்கிறார்கள்.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் பிஜேபி கூட்டணியில் இந்திய ஜனநாயக கட்சியின் நிறுவனத் தலைவர் பாரிவேந்தர் பெரம்பலூர் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டார். அப்போதும் பிஜேபி புறநகர் மாவட்ட தலைவராக இருந்த அஞ்சாநெஞ்சன், பாரிவேந்தரை எதிர்த்து திமுக சார்பில் போட்டி யிட்ட அமைச்சர் நேருவின் மகனான அருண் நேருவுக்கு முழுக்க முழுக்க தன்னால் இயன்ற அளவிற்கு சப்போர்ட் பண்ணினாராம். அமைச்சர் நேருவின் சுண்டு விரலுக்கு ஆடக்கூடிய பிஜேபி புறநகர் மாவட்ட அஞ்சான் நெஞ்சன், பிஜேபி கட்சியின் வளர்ச்சி பணிகளை எப்படி செய்வார்? இவரை மாத்துங்க என்று கடந்த ஓராண்டாகவே திருச்சி மாநகரில்





லீமாரோஸ்



அஞ்சாநெஞ்சன்

உள்ள பிஜேபி முக்கியஸ்தர்கள் பலரும் போர்க்குரல் கொடுத்து தான் வருகிறார்கள்.

கடந்த முறை தப்பித்தவறி இவர் நேருவின் உறவினர் என்று தெரியாமலும், திமுகவின் விசுவாசி என்று அறியாமலும் திருச்சி புறநகர் மாவட்ட தலைவராக போட்டுள்ளார்களாம். ஆனால் அதற்குப் பிறகுதான் அப்போது மாநிலத் தலைவராக இருந்த அண்ணாமலைக்கு திருச்சி புறநகரில் இருந்து புகார் மனுக்கள் குவிந்த உடன் தெரிந்திருக்கிறதாம். ஆனால் தற்போது அண்ணாமலை மாநில தலைவராக இருந்திருந்தால் அஞ்சாநெஞ்சனை நியமித்திருக்க மாட்டார் என்று அடித்துக் கூறுகிறார்கள்.

இந்நிலையில் தற்போது திருச்சி புறநகருக்குட்பட்ட மணச்சநல்லூர் சட்டமன்ற தொகுதியில் பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் மருத்துவக் கல்லூரியின் தாளாளர் மகன் கதிரவன் திமுக சார்பில் மீண்டும் போட்டியிடுகிறார். தேசிய ஜனநாயக கூட்டணியின் சார்பில் பரதன் களம் இறக்கப்பட்டுள்ளார். இதில் தனக்கு உறவினரான திமுக வேட்பாளர் கதிரவனுக்குத்தான் பிஜேபி புறநகர் மாவட்ட தலைவர் அஞ்சாநெஞ்சன் மறைமுகமாக வேலை பார்த்து வருவதாக கூறப்படுகிறது.

அதைப்போல் திருச்சி புறநகர் பகுதிக்குட்பட்ட லால்குடி சட்டமன்ற தொகுதியில் தேசிய ஜனநாயக கூட்டணியில் அதிமுக சார்பில் லாட்டரி அதிபர் மார்ட்டின் மனைவி லீமா ரோஸ் களம் இறக்கப்பட்டுள்ளார். இங்கும் புறநகர் மாவட்ட தலைவர் கூட்டணி கட்சி அதிமுகவுக்கு ஆதரவாக பெயரளவில் தான் செல்கிறாரே தவிர அமைச்சர் நேருவின் சொல்படி திமுகவுக்கே சப்போர்ட் செய்து வருவதாக கூறப்படுகிறது.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் ஆளானப்பட்ட எஸ்ஆர்எம் பல்கலைக்கழக வேந்தர் பாரிவேந்தரையே டெபாசிட் இழக்க செய்தவர்களில் இவரும் ஒருவர் என்கிறார்கள். திருச்சி புறநகர் பிஜேபியினரிடம் விசாரித்தால் காது கிழியும் அளவிற்கு குமுறுகிறார்கள். இவ்வாறு எதிர்க்கட்சி திமுகவுக்கு மட்டுமே முழுக்க முழுக்க ஜால்ரா அடித்து வரும் புறநகர மாவட்ட தலைவர் அஞ்சாநெஞ்சனை மாற்றும் வரை எங்கள் போர்க்குரல் ஓயாது என்கிறார்கள் லால்குடி, மணச்சநல்லூர் சட்டமன்ற பிஜேபியினர்.

ஒரு புறநகர் மாவட்டத் தலைவரே திமுகவுக்கு ஜால்ரா அடித்து வருவது வெளிப்படையாகவே தெரிந்தும், பாஜக மாநில தலைமை தூங்கிக் கொண்டிருப்பது எதனால் என்று யாருக்குமே புரியாத புதிராக உள்ளது. நாமும் பொறுத்திருந்து பார்ப்போம்.

# "மதுரை மக்கள் கோபத்தையும் பாசத்தையும் அதிகமாகக் காட்டக்கூடியவர்கள்; உதயநிதி ஸ்டாலின் முழக்கம்!



அலங்காநல்லூர் ஏப். 17-

சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் வெங்கடேசன் அவர்களை ஆதரித்து, தமிழகத் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அலங்காநல்லூர் மற்றும் பாலமேடு பகுதிகளில் சூறாவளிப் பிரச்சாரம் மேற்கொண்டார்.

பிரச்சாரத்தில் பேசிய உதயநிதி, "மதுரை மக்கள் கோபத்தையும் பாசத்தையும் அதிகமாகக் காட்டக்கூடியவர்கள். பாசிச பாஜகவின் பேராபத்தைத் தடுத்து நிறுத்திச் சகோதரத்துவத்தை நிலைநாட்டியவர்கள் நீங்கள். இப்போது தமிழ்நாட்டிற்கு எதிராகச் செயல்படும் என்.டி.ஏ கூட்டணிக்கும், அதன் முரட்டு அடிமையான எடப்பாடி பழனிசாமிக்கும் உங்களது ஒட்டுமொத்த கோபத்தையும் காட்டித் தோல்வியைப் பரிசாகத் தர வேண்டும்" என முழங்கினார்.தொகுதி சாதனைகள்:வேட்பாளர் வெங்கடேசனின் கடந்த 5 ஆண்டு சாதனைகளைப் பட்டியலிட்ட அவர்:

ஏறுதழுவுதல் அரங்கம், அலங்காநல்லூர் மற்றும் சோழவந்தான் பேருந்து நிலையங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. சின்ன இலந்தைகுளத்தில் சிறு விளையாட்டு அரங்கம், அலங்காநல்லூரில் அறிவுசார் மையம் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது. கிராமங்களை இணைக்கும் புதிய பாலங்கள் மற்றும் சாலைகள் சீரமைக்கப்பட்டுள்ளன. பிரச்சாரத்தின் போது தர்ஷினி என்ற சிறுமி, உதயநிதியிடம் மைக் வாங்கி திமுக அரசின் சாதனைகளை வரிசையாகப் பட்டியலிட்டார். இதைக் கேட்டு வியந்த உதயநிதி, "இந்தக் குழந்தையை என்னுடன் அழைத்துச் செல்லட்டுமா?" என்று கேட்டுப் பாராட்டினார். தொடர்ந்து அப்பகுதியைச் சேர்ந்த ஒரு பெண் குழந்தைக்கு 'கயல்விழி' எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தார்.*தொகுதி மறுவரையறை எச்சரிக்கை:*"பாராளுமன்றத் தொகுதி மறுவரையறை மூலம் தமிழ்நாட்டின் உரிமையைப் பறிக்க நினைக்கும் மோடி அரசை எதிர்க்க, முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களின் கரத்தைப் பலப்படுத்த வேண்டும். வெங்கடேசன் அவர்களை 50,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யுங்கள்" என அவர் வேண்டுகோள் விடுத்தார்.




# "ஆமை புகுந்த வீடும், பாஜக புகுந்த நாடும் உருப்படாது!" திருப்பரங்குன்றத்தில் ப. சிதம்பரம் ஆவேச முழக்கம்!

மதுரை ஏப். 17-

திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் கிருத்திகா தங்கப்பாண்டியனை ஆதரித்து, முன்னாள் மத்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் தீவிரப் பரப்புரை மேற்கொண்டார். அப்போது பாஜக மற்றும் அதிமுக கூட்டணியைக் கடுமையாகச் சாடிப் பேசினார்.பொம்மை ஆட்சி விமர்சனம்:பிரச்சாரத்தின் போது பேசிய ப. சிதம்பரம், "எடப்பாடி பழனிசாமி ஒரு முழுமையற்ற பொம்மை (Incomplete Doll). அவரை இயக்குபவர் அமித்ஷாதான். பீகாரில் நிதிஷ் குமாரைப் பயன்படுத்தி ஆட்சியைப் பிடித்த பாஜக, இப்போது அவரை ஓரங்கட்டிவிட்டது. அதேபோல் தமிழகத்திலும் அதிமுகவை ஒரு ஒலிபெருக்கியாக மட்டுமே பாஜக பயன்படுத்துகிறது. அமீனா புகுந்த வீடும், ஆமை புகுந்த வீடும், பாஜக புகுந்த நாடும் உருப்படாது" எனத் தாக்கிப் பேசினார்.கீழடி நாகரிகம் ஸ்ஃ வடநாட்டுப் பண்பாடு:"நாம் விந்திய மலைக்குத் தெற்கே கீழடி நாகரிகத்தில் பிறந்தவர்கள். வடநாட்டு ஆரிய நாகரிகத்தை எங்களிடம் புகுத்த முடியாது. கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட 5 தென் மாநிலங்களும் இணைந்து இந்தத் தேர்தலில் மதச்சார்பற்ற கூட்டணிக்கு வெற்றி தேடித்தர வேண்டும்" என வேண்டுகோள் விடுத்தார்.இந்த எழுச்சி மிகு பிரச்சாரக் கூட்டத்தில் திமுக வேட்பாளர் கிருத்திகா தங்கப்பாண்டி, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி நிர்வாகிகள் மற்றும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# விவசாயி சின்னத்தை நாதக பயன்படுத்த தடை கோரிய வழக்கு தள்ளுபடி



சென்னை, ஏப்.17-

ஜனதா கட்சியின் 'ஏர் உழவன்' சின்னத்தைப் போல இருக்கும் விவசாயி சின்னத்தை பயன்படுத்த நாம் தமிழர் கட்சிக்கு தடை விதிக்கக் கோரிய வழக்கை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை ஒட்டி, நாம் தமிழர் கட்சிக்கு விவசாயி சின்னம் ஒதுக்கி, தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில், ஏர் உழவன் சின்னம் போல காட்சியளிக்கும் விவசாயி சின்னத்தை பயன்படுத்த நாம் தமிழர் கட்சிக்கு தடை விதிக்கக் கோரி ஜனதா கட்சி சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.இந்த வழக்கு, தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்த போது, தேசிய கட்சியான ஜனதா கட்சி, 1977 ம் ஆண்டு முதல் ஏர் உழவன் சின்னத்தை பயன்படுத்தி வந்துள்ளது.

தங்கள் சின்னத்தைப் போல நாம் தமிழர் கட்சிக்கு விவசாயி சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக தேர்தல் ஆணையத்துக்கு அளித்த விண்ணப்பம் பரிசீலிக்கப்படவில்லை என மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.தேர்தல் ஆணையம் தரப்பில், ஜனதா கட்சி தற்போது அங்கீகாரத்தை இழந்து விட்டதால், ஏர் உழவன் சின்னத்தை தக்க வைத்துக் கொள்ள எந்த உரிமையும் இல்லை. உச்ச நீதிமன்றமும் இதை வலியுறுத்தி உத்தரவு பிறபித்துள்ளது என வாதிடப்பட்டது.இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், ஜனதா கட்சிக்கு ஏர் உழவன் சின்னத்தையும், நாம் தமிழர் கட்சிக்கு விவசாயி சின்னத்தையும் ஒதுக்கி தேர்தல் ஆணையம் பிறப்பித்த உத்தரவுகளை மனுதாரர் கட்சி தரப்பில் தாக்கல் செய்யவில்லை எனவும், ஏற்கனவே அங்கீகாரத்தை இழந்த கட்சிக்கு சின்னத்தை தக்க வைக்க உரிமையில்லை என்ற உச்ச நீதிமன்ற உத்தரவையும் சுட்டிக்காட்டி, வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# அழகர் நகரில் 'துளிர் இல்லம்' துவக்க விழா: மாணவர்களிடையே அறிவியல் ஆர்வம் வளர்க்கப் புதிய முன்னெடுப்பு




மதுரை ஏப். 17-

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் வடக்கு கிளையின் சார்பாக, அழகர் நகரில் 'துளிர் இல்லம்' துவக்க விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாணவர்களிடையே அறிவியல் சிந்தனையைத் தூண்டும் நோக்கில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

*தலைமை மற்றும் வாழ்த்துரை:*வடக்கு கிளைத் தலைவர் பேராசிரியர் கண்ணன் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். அவர் தனது உரையில், கோடைக் காலத்தில் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து விரிவாக விளக்கினார். தீபம் மகளிர் மேம்பாட்டு இயக்கத்தின் தலைவர் ராதிகா முன்னிலை வகிக்க, அல் அமீன் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் ஷேக் நபி மற்றும் செயலாளர் அறிவொளி சேகர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.*சிறப்புரை மற்றும் பெயர் சூட்டு விழா:*அகில இந்திய அறிவியல் கூட்டமைப்பின் தலைவர் முனைவர் கிருஷ்ணசாமி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, "அறிவியல் மனப்பான்மை" என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். இந்த நிகழ்வின் முக்கிய அங்கமாக, பெண் கல்விக்காகப் போராடி வெற்றி பெற்ற அறிவியல் அறிஞர் ஜானகி அம்மாள் அவர்களின் பெயர் இந்த வடக்கு கிளைக்குச் சூட்டப்பட்டது. நிகழ்ச்சியில் பங்கேற்ற 50 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளுக்குப் பொறுப்பாளர் ரமேஷ் புத்தகங்களைப் பரிசாக வழங்கினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைத் துணைத் தலைவர் கற்பகவள்ளி செய்திருந்தார். இதில் பேராசிரியர் எழில், தமிழ்ஆர்வலர் ஆதித்தா, ஆசிரியர்கள் தமிழ்க்குமரன், ஷெரிப் அலி,இணைச் செயலாளர்கள் முனைவர் விமல், செந்தில் மற்றும் தீபம் மகளிர் மேம்பாட்டுக் குழுப் பெண்கள் திரளாகக் கலந்து கொண்டனர். பொருளாளர் ஜாகிர் நிஷா நன்றியுரையாற்றினார்.

# "என் வாழ்க்கையில் வாக்குக்கு பணம் கொடுக்கும் பழக்கமே இல்லை" பிடிஆர் பெருமிதம்



மதுரை, ஏப்.17-

"வாழ்க்கையில் வாக்குக்குப் பணம் கொடுக்கும் பழக்கமே இல்லை. வாக்குக்கு பணம் கொடுக்காமல் தோல்வியடைந்த வரலாறும் கிடையாது. தொடர்ந்து வெற்றி வெற்றி" என்று மதுரை மத்திய தொகுதி திமுக வேட்பாளரும், அமைச்சருமான பழனிவேல் தியாகராஜன் தெரிவித்தார்.மதுரை மத்தி சட்டப்பேரவைத் தொகுதியின் ஆறுமுச்சந்தி பகுதியில் தமிழர் தேசிய முன்னணி சார்பில் மத சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து பொதுக்கூட்டம் நடந்தது. தமிழர் தேசிய முன்னணியின் நிறுவனத் தலைவர் பழ.நெடுமாறன் தலைமை வகித்துப் பேசினார்.இதில் பழனிவேல் தியாகராஜன் பேசியது: "1980ம் ஆண்டு எம்ஜிஆர் ஆதரவுடன் பழநெடுமாறன், எனது தந்தை பழனிவேல் ராஜனை எதிர்த்து நின்றார். அப்படியிருந்தும் இரு குடும்பத்தினரும் நெருங்கிய உறவுடன்தான் உள்ளன. அந்தக் காலத்தில் அரசியல் நாகரிகம், பண்பு, மாண்பு இருந்தது. இன்றைக்கு அரசியல் சூழ்நிலை மாறிவிட்டது. பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிற அதிமுக, பல ஆண்டுகளாக மத்திய தொகுதியில் நேரடியாக வேட்பாளரை நிறுத்தவில்லை. தோழமைக் கட்சிகளுக்கு ஒதுக்கி அவர்களுடைய வேட்பாளர்களை நிறுத்துகிறார்கள்.

ஜெயலலிதாவால் கட்சியில் இருந்து விரட்டப்பட்ட ஏ.சி.சண்முகத்தின் அங்கீகாரம் பெறாத கட்சிக்காக இறக்குமதியானவர்தான் வேட்பாளர் சுந்தர் சி. அவர் வாழ்க்கையில் ஒரு நாள்கூட பொதுப்பணியில் ஒரு ரூபாய்கூட செலவு செய்தது இல்லை. போராட்டத்தில் பங்கேற்றதும் இல்லை. அவருக்கு இரட்டை இலை சின்னத்தை குத்தகைக்குக் கொடுத்துள்ளார்கள்.

இந்த பிடிஆருக்கு வாழ்க்கையில் வாக்குக்கு பணம் கொடுக்கும் பழக்கமே இல்லை. வாக்குக்குப் பணம் கொடுக்காமல் தோல்வியடைந்த வரலாறும் கிடையாது. தொடர்ந்து வெற்றி வெற்றி. ஆனால், ஏ.சி.சண்முகத்துக்கு வாக்குக்குப் பணம் கொடுக்காமல் தேர்தலைச் சந்தித்த வரலாறு கிடையாது. வாக்குக்குப் பணம் கொடுத்து வெற்றிபெற்ற வரலாறும் கிடையாது. தொடர்ந்து தோல்வி, தோல்வி, தோல்வி" என்று அவர் பேசினார்.




■ ராதாபுரம் சட்டமன்ற தொகுதியில் பாஜக பக்கம் தாவும் அஜித் ரசிகர்கள். சமீபத்தில் ராதாபுரம் சட்டமன்ற பாஜக வேட்பாளர் பாலகிருஷ்ணனை ஆதரித்து பிரச்சாரம் செய்ய வந்த பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலையை வரவேற்கும் விதமாக அஜித் ரசிகர்கள், அஜித் மற்றும் அண்ணாமலை படம் போட்ட வாழ்த்து மடல்களை அண்ணாமலைக்கு வழங்கினர்.



# அமைச்சர் கோவி.செழியனை முற்றுகை யிட்ட கிராம மக்கள் நடந்தது என்ன?

கும்பகோணம், ஏப்.17-

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடை மருதூர் தொகுதிக்கு உட்பட்ட குறிச்சி வடுககுடி கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு வாக்குச் சேகரிக்கச் சென்ற உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியனுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அவரது வாகனத்தை கிராம மக்கள் முற்றுகையிட்டனர்.

திருவிடைமருதூர் தொகுதியில் திமுக சார்பில் உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன், அதிமுக சார்பில் முன்னாள் எம்எல்ஏ இளமதி சுப்பிரமணியன், நாதக சார்பில் திவ்யபாரதி, தவெக சார்பில் பிரபாகரன் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு தொகுதிக்கு உட்பட்ட குறிச்சி வடுககுடி கிராமத்துக்கு கோவி.செழியன் வாக்குச் சேகரிக்கச் சென்றார்.அப்போது, கிராம மக்கள் அவரது வாகனத்தை முற்றுகையிட்டு, கிராமத்தில் தெருவிளக்கு, சாலை உள்ளிட்ட எவ்வித அடிப்படை வசதிகளும் செய்து தரவில்லை என குற்றம்சாட்டி, கிராமத்துக்குள் வரக்கூடாது என எதிர்ப்புத் தெரிவித்தனர்.இதனால், கோவி.செழியனுடன் சென்ற கட்சியினருக்கும், கிராம மக்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதையடுத்து, போலீஸார் சென்று சமாதானம் செய்ததையடுத்து, கிராம மக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

இருப்பினும், கோவி.செழியன் அந்த கிராமத்துக்குச் செல்லாமல், வேறு கிராமத்துக்கு வாக்குச் சேகரிக்கச் சென்றார். இந்தப் பிரச்சினை காரணமாக அப்பகுதியில் பரபரப்பு நிலவியது.



■ மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டாசியார் அலுவலகத்தில் உள்ள காப்பாறையிலிருந்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்களித்ததை உறுதி செய்யும் ஒப்புகைச் சீட்டுக் கருவிகள் ஆகியவற்றை தேர்தல் நாளன்று பயன்படுத்தப்பட உள்ள வாக்குச்சாவடி மையங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் பொருட்டு, கணினி மூலம் சுழற்சி முறையில் மேற்கொள்ளப்படும் ஒதுக்கீட்டு பணிகளை தேர்தல் பொதுப் பார்வையாளர் வேத் பதி மிஸ்ரா, மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், ஆய்வு செய்து பார்வையிட்டனர். உடன் உசிலம்பட்டி சார் ஆட்சியர் உட்கர்ஷ்குமார் உள்ளார்.

# 100% வாக்களிப்பை வலியுறுத்தி ஆட்சியர் பிரவீன் குமார் முளைப்பாரி ஊர்வலத்தை துவக்கி வைத்தார்




உசிலம்பட்டி ஏப். 17-

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, மதுரை மாவட்டத்தில் 100% வாக்குப்பதிவை உறுதி செய்யும் வகையில் மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித் தலைவருமான கே.ஜே. பிரவீன் குமார், இ.ஆ.ப., வினோதமான முறையில் விழிப்புணர்வு பிரசாரத்தைத் துவக்கி வைத்தார்.உசிலம்பட்டி சார் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற இந்தத் தொடக்க விழாவில், சுமார் 200க்கும் மேற்பட்ட மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர். மதுரையின் பாரம்பரிய அடையாளமான முளைப்பாரியை ஏந்தி, தாரை தப்பட்டை முழங்க மகளிர் குழுவினர் உசிலம்பட்டி தற்காலிக பேருந்து நிலையம் வரை ஊர்வலமாகச் சென்றனர்.

ஊர்வலத்தைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் பொதுமக்கள், அரசு அலுவலர்கள் மற்றும் மகளிர் குழுவினர் அனைவரும் ஒருங்கிணைந்து, "நேர்மையாகவும், 100% கட்டாயமாகவும் வாக்களிப்போம்" என வாக்காளர் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

பாரம்பரிய விழிப்புணர்வு:இதன் ஒரு பகுதியாக மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் பாரம்பரிய முறையில் கும்மி அடித்து, "என் வாக்கு என் கடமை ஸ்ரீ 100% வாக்களிப்போம்" என்ற முழக்கங்களை எழுப்பி பொதுமக்களிடையே பெரும் ஈர்ப்பை ஏற்படுத்தினர். இந்தத் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்வு உசிலம்பட்டி பகுதி மக்களிடையே மிகப்பெரிய கவனத்தைப் பெற்றுள்ளது.

# “மத அடிப்படையிலான எந்த ஓர் இடஒதுக்கீடும் அரசியலமைப்புக்கு எதிரானது” அமித் ஷா



புதுடெல்லி, ஏப்.17-

மகளிர் இடஒதுக்கீட்டில் மத அடிப்படையிலான உள் இடஒதுக்கீடு என்பது அரசியலமைப்புக்கு விரோதமானது என மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இன்று தொடங்கிய நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தில் மகளிர் இடஒதுக்கீடு திருத்த மசோதா மீது விவாதம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு பேசிய எதிர்கட்சிகளில் ஒன்றான சமாஜ்வாதி கட்சி எம்.பி தர்மேந்தர் யாதவ், ‘மகளிர் இடஒதுக்கீடு மசோதாவில் முஸ்லிம் பெண்களுக்கு உள் ஒதுக்கீடு தேவை’ என வலியுறுத்தினார். இதற்கு பதிலளித்த மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, “மத அடிப்படையிலான எந்த ஓர் இடஒதுக்கீடும் இந்திய அரசியலமைப்புக்கு எதிரானது. எனவே, மதத்தின் அடிப்படையில் முஸ்லிம்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவது அரசியலமைப்புக்கு எதிரானது. எந்தவொரு மதத்தின் அடிப்படையிலும் இடஒதுக்கீட்டை நமது அரசியலமைப்புச் சட்டம் அனுமதிக்கவில்லை” என தெரிவித்தார்.

இதையடுத்துப் பேசிய சமாஜ்வாதி கட்சித் தலைவரான அகிலேஷ் யாதவ், “நாட்டின் பாதி மக்களுக்கு ஒட்டுமொத்த நாடும் இடஒதுக்கீடு கோருகிறது. முஸ்லிம் பெண்கள் இந்தப் பிரிவில் வரவில்லையா என்பதை நான் அறிய விரும்புகிறேன்? மக்கள் தொகையின் பாதியளவில் முஸ்லிம் பெண்கள் இல்லையா? மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படாதது ஏன்?” எனக் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் பேசிய அமைச்சர் அமித் ஷா, “மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணி தொடங்கி நடைபெற்று வருகிறது என்பதை இந்த அவையின் மூலம் நாட்டு மக்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். தற்போது வீடுகளுக்கான கணக்கெடுப்புதான் நடத்தப்படுகிறது. இந்த கணக்கெடுப்பில் சாதிப் பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது. இது ஒரு முழுமையான சாதிவாரி கணக்கெடுப்பாக இருக்கும்.வீடுகளுக்கு சாதி கிடையாது. சமாஜ்வாதி கட்சி நினைத்திருந்தால், வீடுகளுக்கும் அது சாதியை நிர்ணயித்திருக்கும்” என கூறினார். தொடர்ந்து பேசிய அமித் ஷா, “தனிநபர்கள், குடிமக்களின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படும்போது அதில் சாதிக்கான ஒரு பத்தியும் சேர்க்கப்படும். இந்தக் கணக்கெடுப்பு, சாதி கணக்கெடுப்புடன் சேர்த்து நடத்தப்படும் என்று இந்த அவைக்கு நான் உறுதியளிக்க விரும்புகிறேன்” எனத் தெளிவுபடுத்தினார்.

இதையடுத்து மீண்டும் கேள்வி எழுப்பிய எம்பி அகிலேஷ், “மக்கள் தொகையில் பாதியளவினருக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்று ஒட்டுமொத்த நாடும் விரும்புகிறது. முஸ்லிம் பெண்கள் இந்தக் வகையின் கீழ் வரமாட்டார்களா?” எனக் கேள்வி எழுப்பினார். அகிலேஷின் இந்தக் கேள்விக்குப் பதிலளித்த அமித் ஷா, “தேர்தலின் போது தனது கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான அனைத்து வாய்ப்புகளையும் முஸ்லிம் பெண்களுக்கே சமாஜ்வாதி கட்சி வழங்கினால், அதற்கு நாங்கள் எவ்வித ஆட்சேபனையையும் தெரிவிக்க மாட்டோம்” என்று கூறினார்.

நாடாளுமன்ற அவை துவங்குவதற்கு முன்பாக மறைந்த பாலிவுட் பாடகர் ஆஷா போன்ஸலே மற்றும் முன்னாள் மத்திய அமைச்சர்களான சிபிஐயின் அபு ஹாசீம் கான் சவுத்ரி மற்றும் காங்கிரஸின் மோசீனா கித்வாய் ஆகியோருக்கும் அஞ்சலில் செலுத்தப்பட்டது.

# “இந்தி பேசும் மாநிலங்களின் ஆதிக்கத்தை அதிகரிக்கச் சதி!” தொகுதி மறுசீரமைப்பு நகலைத் தீயிட்டு எரித்து அப்பாவு கடும் குற்றச்சாட்டு



வள்ளியூர் (வடக்கு), ஏப்.17-

இந்தி பேசும் மாநிலங்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கவும் இந்தி பேசாத மாநிலங்களில் பிரதிநிதித்துவத்தை குறைக்கவும் தொகுதி மறுசீரமைப்பை மத்திய அரசு செய்வதாக சபாநாயகர் அப்பாவு குற்றச்சாட்டு. மத்திய அரசு கொண்டுவர உள்ள தொகுதி மறுசீரமைப்பு மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து திமுகவினர் தங்களது வீடுகளில் கருப்பு கொடி ஏற்றி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும் என கழகத் தலைவரும் தமிழக முதல்வருமான ஸ்டாலின் தெரிவித்திருந்தார். அதனடிப்படையில் நெல்லை கிழக்கு மாவட்டம் வள்ளியூர் வடக்கு ஒன்றியம் சார்பில் வடக்கன்குளத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்திற்கு நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் கிரகாம்பெல் தலைமை வகித்தார். வள்ளியூர் வடக்கு ஒன்றிய செயலாளர் அலெக்ஸ் அப்பாவு வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக ராதாபுரம் தொகுதி திமுக வேட்பாளரும் சபாநாயகருமான அப்பாவு கலந்து கொண்டு மத்திய அரசுக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பினார். தொடர்ந்து தொகுதி மறுசீரமைப்பு நகலை தீயிட்டு கொளுத்தினர். ஆர்ப்பாட்டத்தில் கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். பின்பு அப்பாவு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, மத்திய அரசு திட்டமிட்டே சதி செய்து ஆயிரம் இருக்கைகள் கொண்ட புதிய நாடாளுமன்றக் கட்டடத்தைக் கட்டி முடித்து இந்தி பேசும் மாநிலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில் இந்த சதித் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இந்தி பேசும் மாநிலங்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் 38 சதவிகிதத்திலிருந்து 43 சதவிகிதமாக உயரும்.அதே வேளையில், தென்னிந்திய(இந்தி பேசாத) மாநிலங்களின் பிரதிநிதித்துவம் 24 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதமாக குறையும். மகளிர் இடஒதுக்கீடு என்ற பெயரில் இந்த தொகுதி மறுவரையறை மசோதாவை மத்திய அரசு கொண்டு வருவது கண்டிக்கத்தக்கது என்றார். ஆர்ப்பாட்டத்தில் கட்சி நிர்வாகிகள் ஆதிபரமேஸ்வரன், சிவா, கோசிஜின், வள்ளியூர் யூனியன் துணை சேர்மன் வெங்கடேஷ் தன்ராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ரூ.8,000 மாதிரி கூப்பன் விநியோகத்தால் பரபரப்பு சிவகங்கையில் நடந்தது என்ன?




சிவகங்கை, ஏப்.17-

சிவகங்கையில் ரூ.8,000க்கான மாதிரி கூப்பன் விநியோகித்த 2 பேரை பிடித்து தேர்தல் அதிகாரிகளிடம் அதிமுகவினர் ஒப்படைத்தனர். அவர்களை அதிகாரிகள் விடுவித்ததால் காவல் நிலையத்தை முற்றுகையிட்டனர். அப்போது அதிமுக, திமுகவினர் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. சிவகங்கை சட்டப்பேரவைத் தொகுதியில் திமுக சார்பில் கருணாஸ், அதிமுக சார்பில் பி.ஆர். செந்தில்நாதன் போட்டியிடுகின்றனர்.சிவகங்கை 5வது வார்டில் திமுகவினர் சிலர் வீடு வீடாகச் சென்று ரூ.8,000க் கான மாதிரி கூப்பன் கொடுத்ததாகக் கூறப்படுகிறது. இதையறிந்த அதிமுக, பாஜகவினர் அங்கு சென்று 2 பேரை கூப்பனுடன் பிடித்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மரிய ஆரோக்கிய ரூபல்லா தலைமையிலான தேர்தல் நிலையான கண்காணிப்புக் குழுவினரிடம் ஒப்படைத்தனர்.மேலும், அவர்கள் மீது வழக்குப் பதிய வேண்டும் என வலியுறுத்தினர். தொடர்ந்து பிடிபட்ட இருவரையும் நகர் போலீஸாரிடம் தேர்தல் அதிகாரிகள் ஒப்படைத்தனர். ஆனால், சிறிது நேரத்தில் இருவரையும் போலீஸார் விடுவித்தனர்.இதனால் அதிருப்தி அடைந்த அதிமுக நகரச் செயலாளர் என்.எம்.ராஜா, பாஜக நகரத் தலைவர் உதயா தலைமையிலான அதிமுகவினர் சிவகங்கை நகர் காவல் நிலை யத்தை முற்றுகையிட்டனர்.

அதேநேரம் நகராட்சித் தலைவர் சி.எம்.துரை ஆனந்த் தலைமையிலான திமுகவினர் அங்கு வந்தனர். மாதிரி கூப்பன் கொடுப்பதற்கு தேர்தல் ஆணையம் அனுமதி கொடுத்துள்ளதாக தெரிவித்தனர்.ரூ.8,000 மாதிரி கூப்பன் குறித்து விளம்பரம் செய்வதற்குத்தான் ஆணையம் அனுமதி கொடுத்துள்ளது. கூப்பனை வாக்காளர்களிடம் விநியோகிக்கக் கூடாது என்று அதிமுகவினர் கூறினர்.இதனால், இரு தரப்பினர் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. டிஎஸ்பி அமலா அட்வின் தலைமையிலான போலீஸார் இரு தரப்பினரையும் சமரசப்படுத்தி அனுப்பி வைத்தனர். அதைத்தொடர்ந்து அதிமுகவினர் புகார் மனு கொடுத்தனர்.இது குறித்து போலீஸாரிடம் கேட்டபோது, ‘மாதிரி கூப்பன் கொடுத்ததில் விதிமீறல் இருக்கிறதா என்பது குறித்து தேர்தல் அதிகாரிகளிடம் விளக்கம் பெற்று, தவறு இருந்தால் வழக்குப் பதிந்து விசாரிக்கப்படும்’ என்றனர்.

அதிமுகவினர் கூறுகையில், ‘கூப்பன் விநியோகம் செய்த நபர்களை பிடித்து அதிகாரிகளிடம் ஒப்படைத்தோம். பறிமுதல் செய்த கூப்பன்களை வாங்கிக் கொண்டு நடவடிக்கை எடுப்பதாகக் கூறினர். ஆனால் நடவடிக்கை எடுக்காமல் இருவரையும் தப்பவிட்டனர். தேர்தல் அதிகாரிகளும், போலீஸாரும் ஆளும்கட்சிக்கு ஆதரவாக உள்ளனர்’ என்று கூறினர்



# பல்லாவரம் தொகுதி மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வேன்

## ஐஜேகே வேட்பாளர் உறுதி

பல்லாவரம், ஏப்.17-

அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பல்லாவரம் தொகுதியில் போட்டியிடும் ஐஜேகே வேட்பாளர் வி.வெங்கடேசன், குரோம்பேட்டை அஸ்தினாபுரம் பகுதியில் நடைப்பயிற்சி மேற்கொண்ட மக்கள் மற்றும் விளையாட்டுத் திடலில் பயிற்சி மேற்கொண்டவர்களிடம் அதிமுக ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற திட்டங்கள் பற்றி எடுத்துக் கூறியும் மின் கட்டணம், விலைவாசி உயர்வுக்கு காரணமான திமுக ஆட்சியின் அவலத்தையும் எடுத்துக் கூறி திமுக ஆட்சியை நிரந்தரமாக வீட்டுக்கு அனுப்பி பழனிசாமி தலைமையில் நல்லாட்சி மலர இரட்டை இலைக்கு வாக்களிக்க கேட்டுக் கொண்டார்.

தான் வெற்றி பெற்றவுடன் தொகுதி மக்களின் அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்ய மக்களின் குரலாக சட்டப்பேரவையில் எதிரொலிப்பேன் என உறுதியளித்தார்.

பெண்களிடம் வாக்கு சேகரித்த தவெக வேட்பாளர் காமாட்சி ஜெயகிருஷ்ணன்.பெண்களிடம் வாக்கு சேகரித்த தவெக வேட்பாளர் காமாட்சி ஜெயகிருஷ்ணன்.

தொகுதியில் உள்ள ஏரிகளில் கழிவுநீர் கலப்பதை தடுத்து தூர்வாரப்படும். போதைப் பொருளால் இளைஞர்கள் சீரழிந்து வருவதை தடுக்க பள்ளி, கல்லூரிகளில் போதைப் பொருள் எதிர்ப்பு மன்றங்கள் அமைக்கப்படும்.

வேலை தேடும் பட்டதாரிகளுக்கு நான்காயிரம் ரூபாயும், டிப்ளமோ படித்தவர்களுக்கு 2500 ரூபாயும் இளைஞர் நலன் நிதியாக பெற்றுத் தருவேன் எனக் கூறி விசில் சின்னத்துக்கு வாக்கு சேகரித்தார்



# சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு சென்னையில் 4 நாட்களுக்கு டாஸ்மாக் கடைகள் மூடல்

சென்னை, ஏப்.17-

சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு சென்னையில் 4 நாட்களுக்கு டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டும் என மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்; தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் மற்றும் பார்கள், அயல்நாட்டு மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் மற்றும் பார்கள் ஏப்.21, 22, 23 (வாக்குப்பதிவு நாள்), 04.05.2026 (வாக்கு எண்ணிக்கை நாள்) ஆகிய நாட்களில் மூடப்படும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் தேர்தல் சுதந்திரமாகவும், நியாயமாகவும், அமைதியாகவும், சுமூகமாகவும் நடைபெறுவதை உறுதி செய்திடும் நோக்கில், தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் பார்கள்) விதிகள் 2003, விதி 12(2)ன்படி உரிமம் பெற்று இயங்கி வரும் இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் (IMFL) சில்லறை விற்பனை கடைகள், தமிழ்நாடு சுற்றுலா அவற்றுடன் இணைந்த பார்கள் மற்றும் திலி2 முதல் திலி11 வரை (FL6 தவிர) உரிமம் பெற்ற உரிமதலங்கள் அனைத்தும் பிப்.21ம் தேதி (செவ்வாய்க்கிழமை) அன்று முற்பகல் 10 மணி முதல் வாக்குப்பதிவு நாளான பிப்.23ம் தேதி (வியாழக்கிழமை) அன்று நள்ளிரவு 12 மணி வரையும், வாக்கு எண்ணிக்கை நாளான மே 4ம் தேதி (திங்கட்கிழமை) ஆகிய 4 நாட்களுக்கு மூடப்பட்டிருக்கும். மேற்குறிப்பிட்ட நாட்களில் மதுபானங்கள் விற்பனை செய்யப்படமாட்டாது என்றும், மேலும், அன்றைய தினங்களில் விதிகளுக்கு மாறாக மது விற்பனை ஏதும் செய்யப்பட்டால் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்

# கச்சா எண்ணெய் தொடர்பாக இந்தியாவுக்கு இனிமேல் சலுகை கிடையாது என்று அமெரிக்கா அறிவிப்பு




வாஷிங்டன், ஏப்.17-

கச்சா எண்ணெய் தொடர்பாக இந்தியாவுக்கு இனிமேல் சலுகை கிடையாது என்று அமெரிக்கா அறிவித்துள்ளது. ரஷ்யா, ஈரானிடம் ஒரு மாதம் கச்சா எண்ணெய் வாங்க அமெரிக்கா அனுமதி அளித்திருந்தது. கச்சா எண்ணெய் வாங்குவதற்கான அனுமதியை மீண்டும் நீட்டிக்கமாட்டோம் என அமெரிக்கா அறிவித்துள்ளது

# “தொகுதி மறுவரையறை விவகாரத்தில் திமுக வடிப்பது முதலைக் கண்ணீர்” பாஜக எம்.பி கடும் தாக்கு



புதுடெல்லி, ஏப்.17-

தொகுதி மறுவரையறை விவகாரத்தில் திமுக முதலைக் கண்ணீர் சிந்துவதாக மக்களவையில் பாஜக கடுமையாக குற்றம் சாட்டியது.

சட்டமன்றங்களிலும் நாடாளுமன்றத்திலும் மகளிருக்கு 33% இட ஒதுக்கீடு அளிக்கும் நோக்கில் நாடாளுமன்ற சிறப்பு அமர்வு இன்று தொடங்கியது. மூன்று நாட்களுக்கு இந்த அமர்வு நடைபெறும் என்று அரசு அறிவித்துள்ளது.

சிறப்பு அமர்வின் முதல் நாளான இன்று, அரசியல் சாசன திருத்தம் (131 வது திருத்தம்) மசோதா 2026, தொகுதி மறுவரையறை மசோதா 2026, யூனியன் பிரதேச சட்டங்கள் (திருத்த) மசோதா 2026 ஆகிய மூன்று மசோதாக்கள் மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டன.

அரசியலமைப்புத் திருத்த மசோதா மற்றும் தொகுதி மறுவரையறை மசோதா ஆகிய இரண்டு மசோதாக்களை மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் தாக்கல் செய்தார். யூனியன் பிரதேசங்களுக்கான சட்டத் திருத்த மசோதாவை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தாக்கல் செய்தார்.மசோதாக்களை தாக்கல் செய்து பேசிய அர்ஜுன் ராம் மேக்வால், “மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில் தொகுதி மறுவரையறை மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தொகுதி மறுவரையறை செய்யப்பட்டால் தங்களுக்கான பிரதிநிதித்துவம் குறையும் என்று சில மாநிலங்கள் அச்சம் தெரிவிக்கின்றன. ஆனால், அத்தகைய அச்சம் தேவையற்றது. ஏனெனில், நாடாளுமன்ற மக்களவை தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில் அனைத்து மாநிலங்களுக்கும் 50% எண்ணிக்கை அதிகரிக்கப்படும். இதனால், மக்களவையின் மொத்த இடங்கள் 815 ஆக அதிகரிக்கும். இதில், 272 இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்படும். இதனால், எந்த மாநிலத்துக்கும் எந்த இழப்பும் ஏற்படாது. அனைத்து மாநிலங்களும் தற்போதைய நிலையிலேயே தங்கள் பலத்தை தக்க வைத்துக்கொள்ளும்” என கூறினார்.தொடர்ந்து இந்த மசோதாக்கள் மீது நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய கர்நாடகாவைச் சேர்ந்த பாஜக எம்பி தேஜஸ்வி சூர்யா, “இந்த மசோதாக்கள் விவகாரத்தில் எதிர்க்கட்சிகள், குறிப்பாக திமுக ஏன் இவ்வளவு கூச்சலிட வேண்டும்? அவர்கள் சிந்தும் கண்ணீர் முதலைக் கண்ணீர் மட்டுமே.2026 ஆம் ஆண்டில் நாடு தொகுதி மறுவரையறைப் பணியை மேற்கொள்ளும்போது, பாஜக தலைமையிலான மத்திய அரசே அதனைச் செயல்படுத்தும் என்பதில் நான் கடவுளுக்கு நன்றி கூறுகிறேன். காங்கிரஸ் அரசு ஆந்திரப் பிரதேசத்தை இரண்டு பகுதிகளாகப் பிரித்தபோது, நாட்டைப் பிரித்தபோது ஆங்கிலேயர்கள் செய்ததை விட மோசமான முறையில் அவர்கள் செயல்பட்டனர்.நான் தென்னிந்தியாவைச் சேர்ந்தவன், கர்நாடகத்தைச் சேர்ந்தவன். கடந்த மூன்று நாட்களாக, தென்னிந்தியாவில் எதிர்க்கட்சிகள் மிகவும் அராஜகமான முறையில், திட்டமிட்டுத் தவறான தகவல்களைப் பரப்பிப் பிரச்சாரம் செய்வதை நாங்கள் கண்டு வருகிறோம். இன்று உண்மையிலேயே ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நாள்தேசியக் கொள்கைகளை வகுக்கும் செயல்முறையில் பங்கேற்பதற்கான தங்கள் உரிமைக்காக இந்தியப் பெண்கள் ஏறக்குறைய 40 ஆண்டுகளாகக் காத்திருக்கிறார்கள். தற்போது அவர்கள் தங்களுக்குரிய உரிமையைப் பெற இருக்கிறார்கள். தற்போதும்கூட, பெண்கள் இடஒதுக்கீடு மசோதாவைச் செயல்படுத்துவதை மேலும் தாமதப்படுத்தவும், சீர்குலைக்கவும், எதிர்க்கவும் எதிர்க்கட்சிகள் ஒரு புதிய வாதத்தையும், புதிய சாக்குப்போக்கையும் முன்வைத்துள்ளன. அவர்கள் முன்வைத்துள்ள அந்தப் புதிய சாக்குப்போக்கு, தொகுதி மறுவரையறைப் பணிக்கு எதிராக அவர்கள் தெரிவிக்கும் வாதங்கள் அனைத்தும் அடிப்படை அற்ற எதிர்ப்பே ஆகும். தொகுதி மறுவரையறை என்பது மறைமுகமாக மேற்கொள்ளப்படும் ஒரு செயல்பாடு அல்ல. அரசியலமைப்புச் சட்டம் என்ன கட்டளையிடுகிறதோ, அதை மட்டுமே நாங்கள் முழுமையாகப் பின்பற்றுகிறோம்” என்று தெரிவித்தார்.



■ தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதி அ.தி.மு.க.வேட்பாளர் டாக்டர் திலீபன் ஜெய்சங்கர் நகர் புறங்களில் வாக்கு சேகரிப்பு, திரு வி காத்தெரு முத்துராமலிங்கபுரம் தெரு , உச்சி மாகாளியம்மன் கோவில் தெரு , வடக்கு ராதவிதி, சங்குபுரம் தெரு சென்று பிரச்சாரம் செய்து வாக்குகள் சேகரித்த போது உடன் நகரமன்ற துணைத் தலைவர் கழக எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர் கே. கண்ணன் என்ற ராஜு மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு இணைச் செயலாளர் எஸ் .டி. எஸ். சரவணகுமார் மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் சங்கர சுப்பிரமணியன், மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி அமைப்பாளர் சந்திரன் பூத் நிர்வாகிகள் இளைஞர் அணி மாணவர் அணி இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் பாசறை மகளிர் அணி நிர்வாகிகள் மாவட்ட தலைமை கழக பேச்சாளர்கள் கழக நிர்வாகிகள் கழக உடன்பிறப்புகள் வாக்காள பெருமக்கள் அனைவரும் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.




■ திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரும், மாவட்ட தேர்தல் அலுவலருமான சரவணன் தலைமையில், திண்டுக்கல் ஆத்தூர் தொகுதி சின்னாளப்பட்டி, பூஞ்சோலை பகுதியில் 100 %சதவீத வாக்களிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது.



## ஓமலூரில் அதிமுக வேட்பாளர் மணிக்கு புரட்சி பாரதம் சார்பில் மேளதாள வரவேற்பு

ஓமலூர் ஏப். 17-

சேலம் மாவட்டம் ஓமலூர் சட்டமன்றத் தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிடும் தற்போதைய சட்டமன்ற உறுப்பினரும், வேட்பாளருமான மணி, காடையாம்பட்டி மற்றும் சுண்டகாப்பட்டி உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட கிராமங்களில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

வேட்பாளர் மணிக்கு, புரட்சி பாரதம் கட்சியின் மாவட்டச் செயலாளர் நல்லத்தம்பி தலைமையில் மேளதாளம் முழங்க சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பெண்கள் ஆரத்தி எடுத்தும், மலர்கள் தூவியும், பட்டாசுகள் வெடித்தும் தங்களது ஆதரவைத் தெரிவித்தனர். இதில் அதிமுக, பாமக, பாஜக, தமாகா, அமமுக உள்ளிட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணி நிர்வாகிகள் திரளாகக் கலந்து கொண்டனர்.

*தேர்தல் வாக்குறுதிகள்:* வாக்காளர்களிடையே பேசிய வேட்பாளர் மணி, "முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் அறிவித்துள்ளபடி, அதிமுக ஆட்சி அமைந்ததும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் கருணைத் தொகையாக ₹10,000 வழங்கப்படும். மேலும், ஆண் பெண் இருபாலருக்கும் அரசுப் பேருந்துகளில் இலவசப் பயணம் உள்ளிட்ட திட்டங்கள் செயல்படுத்தப்படும்" என உறுதி அளித்தார்.இந்த நிகழ்ச்சியில், மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் தமிழரசு, மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர் விக்னேஷ், ஒன்றிய கழக செயலாளர்கள் சுப்பிரமணியம், சித்தேஷ்வரன், பேரூர் கழக செயலாளர் ஆனந்தகுமார், பாமக மேற்கு மாவட்ட தலைவர் மாணிக்கம், பாஜக சேலம் மாவட்ட பொதுச் செயலாளர் ரவி, புரட்சி பாரதம் சேலம் மாவட்ட செயலாளர் நல்லத்தம்பி, பாஜக ஒன்றிய தலைவர் சேதுபதி, புரட்சி பாரதம் பேரூர் செயலாளர் ராஜேந்திரன், புரட்சி பாரதம் ஒன்றிய செயலாளர்கள் மாணிக்கம், அபிமன்னன், ஜெய்ஹிந்த், மாவட்ட பொறுப்பாளர்கள் ஜெய்சங்கர், செந்தில்குமார், முருகன் உள்ளிட்ட அதிமுக பாமக பாஜக தமாகா அமமுக மற்றும் ஐஜெகே உள்ளிட்ட தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். உள்ளிட்ட அதிமுக, பாமக, பாஜக, தமாகா, ஐஜெகே மற்றும் அமமுக உள்ளிட்ட தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



■ தென்காசி மாவட்டம் பூலாங்குளத்தில் வது பிறந்தநாள் விழா சினிமா பாடல் ஆசிரியர் கவிஞர் மாயவநாதன் அவர்களின் 91 வது பிறந்தநாள் விழா கே எஸ் செல்வ மஹாலில் தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பு நிறுவனத் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் தலைமையில் கொண்டாடப்பட்டது இந்த விழாவில் தளபதி மு சிவராஜன் வரவேற்புரை ஆற்றினார் கணேஷ் ராஜ் ஜெயராமன் ஆகியோர் தொகுத்து வழங்கினர். தொடர்ந்து தங்கச்சாமி ஆசிரியர் பாலசுப்பிரமணியன் கன்னன் ராஜ் டாக்டர் கந்தசாமி ஜெயராஜ் தவசிமுத்து அல்லிராஜ் முருகன் மணிகண்டன் கார்த்திகைக் குமார் ஆகியோர் பேசினார்கள் விழாவில் கவிஞர் மாயவநாதன் மகன் செல்வவேல் மாயவநாதன் ஏற்புரை ஆற்றினார்.

## "குடியிருப்போர் நலச் சங்கங்களின் கோரிக்கைகள் 100% நிறைவேற்றப்படும்!" வேட்பாளர் ஆர். பாலாஜி அதிரடி உறுதி!



மதுரை ஏப். 17-

மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் ஆர்.பாலாஜி, தனது தொகுதியில் பல்வேறு பகுதிகளில் தீவிரப் பிரச்சாரத்தை மேற்கொண்டார். அப்போது அந்தந்தப் பகுதி குடியிருப்போர் நலச் சங்கங்களின் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என அவர் உறுதியளித்தார். இத்தொகுதிக்கு உட்பட்ட அச்சம்பத்து, சொக்கநாதபுரம், முத்து மாரியம்மன் கோவில், எஸ். வி .ஆர்., நகர், கவரிமான், ஏ.டி. காலனி, கிழக்கு, மேற்கு தெருக்கள் காளவாசல் 63 வார்டுக்கு உட்பட்ட பகுதிகளில் பாலாஜி பிரச்சாரம் செய்தார். பெண்கள் ஆர்த்தி எடுத்து, பூதூவி வரவேற்றனர்."அவர் பேசியதாவது ' ; இத்தொகுதிக்கு உட்பட்ட டி.வி.எஸ் .நகரில் ரோடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. மக்கள் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில்,டி.வி. எஸ்., உங்க அருகில் வாரச்சந்தை செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டது. தொகுதிக்குள் உள்ள 130க்கும் மேற்பட்ட நலச் சங்கங்களை அமைச்சர் மூர்த்தி நேரில் சந்தித்து குறைகள், கோரிக்கைகளை கேட்டறிந்தார். பல்வேறு கோரிக்கையில் நிறைவேற்றப்பட்டன. மீதமுள்ள கோரிக்கை கள் விரைவில் நிறைவேற்றப்படும். தொகுதிக்கு உட்பட்ட பெரும்பாலான கோவில்களுக்கு கூரை வசதி அமைக்க கோரிக்கை வைக்கப்பட்டுள்ளன. அவையும் அடுத்தடுத்து நிறைவேற்றி தரப்படும்.

தொகுதிக்குள் மகளிர் உரிமைத் தொகை விடுபட்ட பெண்களுக்கு குறித்து விவரம் சேமிக்கப்பட்டுள்ளது. திமுக ஆட்சி அமைந்ததும் அத்தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## "தொகுதி மறுவரையறையால் தமிழ்நாட்டுக்கு பாதிப்பில்லை!" அமித்ஷாவின் உறுதிமொழியை சுட்டிக்காட்டி இ.பி.எஸ். அதிரடி!



கோவை, ஏப்.17-

தொகுதி மறுவரைறையால் தமிழ்நாட்டுக்கு ஒருபோதும் பாதிக்கப்படாது என்று மத்திய உள்துறை அமைச்சர் அமிதா ஷா கூறியதாக அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள்ளார். கோவை தெற்கு தொகுதி அண்ணா திமுக வேட்பாளர் அம்மன், கே. அர்ச்சுனனுக்கு ஆதரவாக அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி வாக்கு சேகரித்து பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது பேசிய அவர், " இன்று கருப்புக்கொடி போராட்டம் என்கின்றனர். நான் வரும் வழியில் ஒரு கருப்பு கொடியை கூட பார்க்கவில்லை. யார் வீட்டிலும் கருப்பு கொடியை பார்க்கவில்லை. கோவை மக்கள் உஷாரான மக்கள் விழிப்புணர்வுடன் இருக்கிறார்கள். ஸ்டாலினுக்கு தோழி பயம் வந்துவிட்டது. அதனால் தொகுதி மறுவரையறையை கையில் எடுத்துரைக்கிறார். மத்திய உள்துறை அமைச்சர் அமிதாஷா தமிழ்நாட்டுக்கு வந்தபோது தொகுதி மறுவரையறையால் தமிழ்நாட்டுக்கு ஒரு போதும் பாதிக்கப்படாது என்று கூறினார். தொகுதி மறுவரையறை தமிழகத்தில் எந்த விதத்திலும் பாதிக்காது என்று தெளிவாக சொல்லிவிட்டார். தொகுதி மறு வரையறை எப்படி செயல் செயல்படுத்தப்படும் என்று ஸ்டாலினுக்கு நன்றாகவே தெரியும். ஆனாலும் தான் போராட்டம் செய்தால்தான் மத்திய அரசு பணிந்து விட்டது என்று சொல்வதற்காக கவே இப்படி செய்கிறார். ஸ்டாலின் டபுள் கேம் ஆடுகிறார். தமிழ்நாடு மட்டுமின்றி இந்தியாவில் எந்தவித மாநிலமும் தொகுதிமறுவரையறையாலா பாதிக்கப்படாது என்று மத்திய அரசை தெளிவாக கூறிவிட்டது. மக்கள் மகிழ்ச்சி அடையும் வகையில் தொகுதி மறு வரையறை இருக்கும். ஸ்டாலின் பற் றி மக்களுக்கு நன்றாக தெரியும்" என்று பேசினார்.மக்களவையில் தொகுதி மறு வரையறை, மகளிர் இட ஒதுக்கீடு மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் திமுக, காங்கிரஸ்,உள்ளிட்ட கட்சிகள் அதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது.



## ஏப்.20 வரை தமிழக உள் மாவட்டங்களில் 5 டிகிரி வரை வெப்பநிலை உயர வாய்ப்பு

சென்னை, ஏப்.17-

தமிழகத்தின் உள் மாவட்டங்களில் அதிகபட்ச வெப்பநிலை நாளை முதல் ஏப்.20 வரை வழக்கத்தை விட 5 டிகிரி வரை உயரக்கூடும்.இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: வடகிழக்கு மத்தியப் பிரதேசம் முதல் மன்னார் வளைக்குடா வரை, விதர்பா, மரத்வாடா, உள் கர்நாடகா மற்றும் தமிழகம் வழியாக, சுமார் 1.5 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக (ஏப்.17) முதல் 22ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்களின் கடலோர பகுதிகள் மற்றும் ராமநாதபுரம் மாவட்டத்தில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும். இதர தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.உள் தமிழக மாவட்டங்களில் நாளை முதல் 20ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும்.கடலோர தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவை ஒட்டியே இருக்கக்கூடும்.சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 38 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 82 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும் என்று கூறப்பட்டுள்ளது.












## "முடங்கிக் கிடக்கும் சர்க்கரை ஆலை மீண்டும் இயங்கும்!" சோழவந்தான் வேட்பாளர் கருப்பையா அதிரடி உறுதி!

அலங்காநல்லூர். ஏப்.17-

தமிழக வெற்றிக் கழகத்தின் மதுரை மாநகர் வடக்கு மாவட்ட செயலாளர் விஜய்அன்பன் கல்லானை, ஆலோசனையின் பேரில் புறநகர் மாவட்டச் செயலாளர் விஷால்கிருஷ்ணா,ஒன்றிய செயலாளர் விஜய்ஹரிஷ் முன்னிலையில், மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் கிழக்கு ஒன்றிய பகுதி மற்றும் பண்ணைகுடி ஊராட்சியில், சோழவந்தான் தொகுதி வேட்பாளர் மூ.வீ.கருப்பையா பொதுமக்களிடம் விசில் சின்னத்துக்கு வாக்கு சேகரித்தார். அவர் பேசியது; தளபதி விஜய் முதலமைச்சர் ஆக வேண்டும், அனைத்தும் வாக்காளர் ஆகிய உங்கள் கையில் உள்ளது இந்த பகுதியில் முழுமையான அடிப்படைவசதிகள் செய்திடவும்,தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலையை இயக்கிடவும், அரசு கலைக் கல்லூரி அமைத்திடவும், முடுவார்பட்டி பகுதியில் பழங்களை பதப்படுத்தும் தொழிற்சாலை அமைத்திடவும், முல்லை பெரியார் கால்வாயை சாத்தியார் அணையுடன் இனைத்திடவும் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி தந்திடவும்,

சோழவந்தான் தொகுதியில் அதிக வாக்கு வித்தியாசத்தில் என்னை வெற்றி பெற்று மக்கள் பணி செய்ய ஒரு வாய்ப்பு வழங்குங்கள் என்று பேசினார். தொடர்ந்து கிராம பகுதிக்கு வருகை தந்த வேட்பாளர் மற்றும் நிர்வாகிகளுக்கு தவெக கிளை நிர்வாகி மற்றும் பொதுமக்கள் மலர்தூவி வரவேற்பு கொடுத்தனர்.. இதில் மேற்கு ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, இணைச் செயலாளர் ராமநாதன், நகர செயலாளர் தளபதி ரஞ்சித், பாலமேடு புகழ், வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் தனசேகரன்,கார்த்திக், மற்றும் பரத், மகளிரணி சுஜிதா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்..

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000